30th March 1964]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆரம்ப பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கு 12 ரூபாய் ஸ்டைஃபன்ட் என்றும், செக்கன்டரி பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கு 18 ரூபாய் ஸ்டைஃபன்ட் என்றும் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது ஆரம்ப பள்ளிப் பயிற்சியை எடுத்துவிடுவதாக அரசாங்கம் முடிவு செய்திருக் கிறது. மேலும் இப்போது கொடுக்கப்படும் ஸ்டைஃபன்டை உயர்த்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமில்லை. செகண்டரி பயிற்சி பெறுகின்றவர்களுக்கு 18 ரூபாய் முன்பு போல் கொடுக்கப் படுகிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிக்கு வருகிறவர்களுக்கு மாதம் 18 ரூபாய் கொடுப்பது எந்த அளவுக்குப் போதும் என்று இந்த அரசாங்கம் கருது கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஓரளவுக்குப் போதும் என்று தான் கொடுக்கிறோம். அவர்களுடைய செலவுகளுக்கெல்லாம், வாழ்க்கைச் செலவுகளுக்கெல்லாம் கொடுப்பது என்று அல்ல.

திரு. ம. கமலநாதன் : ஆரம்ப ஆசிரியர் பயிற்சி பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு பயிற்சியை நிறுத்துவதாக இருந் தாலும் இருக்கும் காலத்துக்கு ஸ்டைஃபண்ட் கொடுக்கிறோம் என்று சென்ற ஆண்டு உத்திரவு வந்தது. இந்த ஆண்டும் அந்த மாதிரி உத்திரவு போடப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது மாணவர்களாக இருக்கிறவர்களுக்கு, அதாவது முன்னமேயே சேர்ந்து பயிற்சி பெறுகின்றவர்களுக்கு ஸ்டைஃபன்ட் கொடுக்கப்படும்.

Pre-Primary schools

* 459 *Q.*—Sri M. WILLIAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to open Pre-Primary schools in all the Panchayat Unions in the Kanyakumari district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ப்ரீ-ப்ரைமரி ஸ்கூல்களுக்கு முனிஸிபல் எல்லையில் உள்ளவற்றுக்காவது அனுமதி கொடுப்பார் களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு உத்தேசம் இல்லை. ஆரம்பப் பள்ளிகள் எவ்வளவு வேண்டுமோ வைத்து அவை களுடைய செலவை ஏற்க வேண்டும் என்பதுதான் கொள்கை. இதற்கு மேல் ப்ரீ-ப்ரைமரி ஸ்கூல்களுக்கான செலவையும் ஏற்க வேண்டுமென்றால் அதற்கு நிதி நிலை அனுமதிக்காது.

திரு. எம். தண்டாயுதபாணி : பாலர் பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு 20 ரூபாய் மாதச் சம்பளம் கொடுக்கப் படுகிறது. இதை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசினருக்கு உண்டா ?

[30th March 1964

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தக் கேள்வியில் அது எழ வில்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: பஞ்சாயத்து யூனியனோ, முனிஸிபாலிட்டியோ அவர்களுடைய சொந்த நிதியிலிருந்து பொறுப்பு எடுத்துக்கொண்டால் அத்தகைய பள்ளிகளுக்கு அனுமதி அளிக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு பஞ்சாயத்து யூனியன்கள் கோரிக்கை அனுப்பினால் அது பரிசீலனை செய்யப் படும்.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, பாலர் பள்ளி ஆசிரியர்களுடைய தகுதி, திறமை என்ன என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

UNSTARRED QUESTIONS.

Formation of Road (Sekkappatti-Rengappanaickenppatti).

61 *Q.*—SRIMATHI A. S. PONNAMMAL: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தாலுகா, வத்தலக்குண்டு பிர்க்கா செக்காப் பட்டி முதல் ரெங்கப்பநாயக்கன்பட்டிவரை ரோடு அமைப்பது சம்பந்தமாக எந்த ஆண்டில் சாங்ஷன் செய்யப்பட்டது?

(இ) அந்த ரோடு வேலை ஆரம்பிக்கப்பட்டும் இதுவரை முடிக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

A.—(*a*) The work of Formation of road from Sekkapatti to Rengappanaickenpatti was approved for execution in 1958–59 under the Second Five-Year Plan Scheme for District Boards.

(*b*) The work could not be completed due to the delay in acquiring the required lands. Some of the land owners in Rengappanaickenpatti village raised very strong objection for acquisition of their lands for the formation of the road and even prevented the Special Surveyor from conducting survey in their lands. Now lands have been acquired for a length of about three miles out of 7 miles. The land acquisition work for the balance length of the alignment is in progress.

(அ) செக்காப்பட்டியிலிருந்து ரெங்கப்பநாய்க்கன்பட்டிவரை சாலை போடும் வேலை இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மாவட்டக் கழகங் களின் வேலைத் திட்டத்தின்கீழ 1958-59-ல் அனுமதிக்கப்பட்டது.

(இ) தேவையான நிலங்களை ஆர்ஜிதம் செய்வதில் தாமதம் ஏற் பட்டதால் மேற்படி வேலையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. ரெங்கப்ப நாய்க்கன்பட்டியில் உள்ள சில நிலச் சொந்தக்காரர்கள் தங்கள் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படுவதற்கு ஆட்சேபித்தனர். அவர்களுடைய நிலங்களை சர்வே செய்யாதபடி ஸ்பெஷல் சர்வேயரையும் தடுத்தனர். இப்போது 7 மைல்களில், 3 மைல் தூரத்திற்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுவிட்டது. சாலையின் மீதி பாகத்தில் நில ஆர்ஜித வேலை நடந்துவருகிறது.